Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | CC.06/2019<br><br>LW6 examined as PW5 Chief and Cross |

| | | |
|---|---|---|
| Time | : | 12.54pm – 1.15pm |
| Name | : | திரு. மஞ்சுநாத் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது குடிசெட்லு கேட் தும்மனப்பள்ளி ஓசூரில் குடியிருந்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2018 ம் வருடம் பாகலூரில் இருந்து எனது Star City வாகனத்தில் எனது ஊருக்கு வந்துக் கொண்டு இருந்த போது எனக்கு முன்னால் வந்து கொண்டிருந்த Chines Honda வண்டி எனக்கு எதிரே வந்துக் கொண்டு இருந்த வண்டியின் மீது மோதி இடித்ததால் தீடீர் என்று சடன் பிரேக் போட்டதால் நாங்கள் கீழே விழுந்து விட்டோம். எனக்கு எதிரே வண்டியில் வந்த நபர் இறந்து விட்டார். அவர் பெயர்

எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய நபர் ஆஜர் எதிரி தான். நான் விபத்து குறித்து போலிஸ்க்கு தகவல் சொன்னேன். அதன் பிறகு போலிசார் என்னை அழைத்து எதிரியை அடையாளம் காட்ட சொன்னார்கள். நான் அடையாளம் காட்டினேன். போலிசார் சம்பவம் குறித்து என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியும். விபத்தில் இறந்து போன நபர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. விபத்தில் இறந்து போன நபரின் தந்தை மற்றும் சகோதரை எனக்கு தெரியுமா என்றால் எனது சித்தப்பா பையன் வீட்டில் அவரின் சகோதரர் வேலை செய்து கொண்டு இருந்தார். குமார் என்ற நபர் சொல்லி தான் எனக்கு தெரியும். எனது சித்தப்பா பையன் மற்றும் இறந்து போன நபரின் தந்தை மற்றும் சகோதரர் ஆகியோர் கேட்டு கொண்டததால் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. விபத்தில் இறந்து போன நபர் Helmet அணிந்திருந்தாரா என்றால் இல்லை. இறந்து போன நபர் பேரிகையில் இருந்து பாகலூர் நோக்கி வந்து கொண்டு இருந்தார். விபத்து நடந்ததை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கீழே விழுந்த உடன் தான் பார்த்தேன். எவ்வளவு தொலைவில் வந்து கொண்டு இருந்தார்கள் என்றால் தெரியாது.

2) என் வண்டி முன்பாக இறந்து போன நபர் வந்து விழுந்தாரா என்றால் அவர் விழுந்து கிடந்தார் நான் பீரேக் போட்டதால் நானும், எனக்கு பின்னால் இருந்தவரும் விழுந்து விட்டோம். கீழே விழுந்த பிறகு தான் எனக்கு என்ன நடந்தது என்று தெரியும். அதற்கு முன்பு எனக்கு என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்றால் சரிதான். அதனால் தான் விபத்தை நான் சரியாக பார்க்க முடியவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் தெரியும். ABL Compound மேற்கு திசையில் உள்ளது என்றும், அதற்கு எதிரே உள்ள வீடுகள் கிழக்கு திசையில் உள்ளது என்றும் சொன்னால் சரிதான். எனது சித்தப்பா பையன் சொன்னதாலும், இறந்து போன சகோதரர் மாரப்பா கேட்டு கொண்டதாலும் காவல் நிலையத்தில் விபத்தை நேரில் பார்த்ததாக காப்பீடு பெற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் கேட்டு கொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC. 06/2019
Sessions prosecution
depositions of witness for — LW7 examined as PW6 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.17pm – 1.22pm |
| Name | : | திரு. பாஸ்கர் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது தும்மனப்பள்ளியில் ஒசூரில் குடியிருந்து வந்து வினாயக பேருந்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். விபத்தில் இறந்து போன வீரபத்திரன் என்னுடைய பஸ்ஸில் கிளினராக பணிபுரிந்து கொண்டு இருந்தார். கடந்த 02/03/2018 ம் தேதி லிங்காபுரம் பேருந்து நிலையம் அருகே விபத்து நடந்ததாக போலிஸ் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். அதற்கு மறுநாள் ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு சென்று பார்த்த போது வீரத்திரனுக்கு தலையிலும், முதுகிலும் அடிப்பட்டு இறந்து கிடந்தார். இது சம்மந்தமாக

போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் ஓட்டுனர் ஆவேன். இறந்து போன வீரத்திரனுக்கு குடி பழக்கம் இருந்தது என்றால் அவ்வபோது மது அருந்துவார். வீரபத்திரனுக்கு இருசக்கர வாகன லைசன்ஸ் இல்லை என்றால் சரிதான். வீரபத்திரனுக்கு ஒட்டுனர் உரிமம் இல்லை என்றும், மது அருந்திவிட்டு அவராகவே வாகனத்தில் வேகமாக சென்றததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் விபத்து ஏற்பட்டதற்கு வீரபத்திரன் தான் காரணம் என்றும் சொன்னால் சரியல்ல. காப்பீடு பெற வேண்டி வீரபத்திரனின் குடும்ப நபர்கள் கேட்டு கொண்டதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காப்பீடு பெறுவதற்காக வீரபத்திரனின் குடும்ப நபர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஆமாம்.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions prosecution<br>depositions of witness for | CC.06/2019<br><br>LW8examined as PW7 Chief and Cross |

| | | |
|---|---|---|
| Time | : | 1.38pm – 1.40pm |
| Name | : | திரு. சாக்கப்பன் |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது மணியாங்கள் சூளகிரியில் குடியிருந்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். இறந்து போன வீரபத்திரன் எனது தம்பி. கடந்த 02/03/2018 ம் தேதி அ.சா.1 மாரப்பா எனக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு வந்து பார்த்த போது வீரபத்திரனுக்கு தலையில் அடிப்பட்டு இறந்து இருந்தார். மறுநாள் காலை 8.00 மணியளவில் சம்பவயிடத்தை பார்ப்பதற்காக நானும், சாதப்பா

என்பவரும் லிங்காபுரம் ABL கேட் அருகே சென்றோம். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம் வரைந்து எழுதினார்கள். அதில் கையெழுத்து போட சொன்னதால் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள என் கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது ஊரில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு எவ்வளவு கிலோ. மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ மீட்டர் இருக்கும். என்னுடன் கையெழுத்து செய்த சாதப்பா ஊரில் இருந்து விபத்து நடந்த இடம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ மீட்டர் இருக்கும். போலிசார் வரைந்ததாக சொன்ன வரைபடத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ABL Compound க்கு எதிரே வீடுகள் இருந்தது என்றால் சரிதான்.

2) ABL Compound மேற்கு திசையிலும், அதற்கு எதிரே உள்ள வீடுகள் கிழக்கு திசையிலும் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து எனது வீடு 25 கி.மீட்டர் தொலைவில் உள்ளதால் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், இறந்து போன எனது தம்பி என்பதால் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS (Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, HOSUR

Calendar
Miscellaneous
Preliminary Register — CC.06/2019
Sessions prosecution
depositions of witness for — LW9 examined as PW8 Chief and Cross

| | | |
|---|---|---|
| Time | : | 1.23pm – 1.37pm |
| Name | : | திரு. சாதப்பா |
| Husband name | : | திரு. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 08th day of August 2024.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் )

முதல் விசாரணை

நான் தற்போது ஒச அள்ளியில் குடியிருந்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். இறந்து போன வீரபத்திரன் எனது சின்ன மச்சான். அ.சா.1 மாரப்பா எனக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பின்னர் ஒசூர் அரசு மருத்துவ மனைக்கு வந்து பார்த்த போது வீரபத்திரனுக்கு தலையில் அடிப்பட்டு இறந்து இருந்தார். மறுநாள் காலை 8.00 மணியளவில் சம்பவயிடத்தை பார்ப்பதற்காக நானும், சாக்கப்பன் என்பவரும் லிங்காபுரம் பேருந்து நிலையம் அருகே சென்றோம். போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து வரைபடம்

வரைந்து எழுதினார்கள். அதில் கையெழுத்து போட சொன்னதால் போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் 2 வதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். பார்வை மகஜரில் உள்ள என் கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

1) நான் கையெழுத்து செய்த தாளில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கு எழுத, படிக்க தெரியாது. சம்பவயிடத்தில் போலிசார் பாதிக்கப்பட்ட நபருக்கு உறவினார்கள் யாரவது இருக்கீர்களா என்று கேட்டார்கள். மாமா நான் இருப்பதாக சொன்னேன். எனது ஊரில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு எவ்வளவு கிலோ. மீட்டர் தொலைவு இருக்கும் என்றால் சுமார் 25 கிலோ மீட்டர் இருக்கும். என்னுடன் கையெழுத்து செய்த சாக்கப்பன் ஊரில் இருந்து விபத்து நடந்த இடம் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 30 கிலோ மீட்டர் இருக்கும். போலிசார் வரைந்ததாக சொன்ன வரைபடத்தில் என்ன இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ABL Compound க்கு எதிரே வீடுகள் இருந்தது என்றால் சரிதான்.

2) ABL Compound மேற்கு திசையிலும், அதற்கு எதிரே உள்ள வீடுகள் கிழக்கு திசையிலும் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருந்து எனது வீடு 25 கி.மீட்டர் தொலைவில் உள்ளதால் நான் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றும், இறந்து போன எனது சின்ன மச்சான் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையொப்பம் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

ஒம்/திருமதி.V.பார்கவி.,B.A.,B.L.,L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்
விரைவு நீதிமன்றம்,
ஓசூர்.